தமிழில் பெயர் சூட்டப்படும் அனைத்துத் தமிழ் திரைப்படங்களுக்கும் கேளிக்கை வரியிலிருந்து முழு வரி விலக்கு – 2007–2008–ஆம் ஆண்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பு – ஈடு கட்டுதல்.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ஊ2) துறை**

**அரசு ஆணை (நிலை ) எண். 86** **நாள்:05.08.2009.**

படிக்கப்பட்டது:

1) அரசாணை (நிலை) எண். 75, நநி (ம) கு.வ துறை, நாள் 01.06.2007.
2) அரசாணை (நிலை) எண். 130, நநி(ம) கு.வ துறை, நாள் 19.9.2007.
3) அரசாணை(நிலை) எண். 191, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. நாள் 22.11.2007.
4) அரசாணை(நிலை) எண். 154, நநி (ம) கு.வ. துறை, நாள் 12.8.2008
5) அரசாணை (நிலை) எண். 31, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (ஊ2) துறை, நாள் 31.3.2009.

-----

**ஆணை:–**

தமிழில் பெயர் சூட்டப்படும் அனைத்து தமிழ்த் திரைப்படங்களுக்கும் கேளிக்கை வரியிலிருந்து முழு விலக்கு அளிக்கும் அரசின் முடிவின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்புகளை ஈடுகட்டும் வகையில் ரூ.30.00 கோடி (ரூபாய் முப்பது கோடி மட்டும்) தமிழ் திரைப்படங்களின் மீதான கேளிக்கை வரி இழப்பீடாக 2007–2008–ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் கோரிக்கை எண். 10–ல் வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறையால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதி ஒதுக்கம் நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளிடையே 90:10 என்ற விகிதத்தில் ரூ.27.00 கோடி மற்றும் ரூ.3.00 கோடியாக பகிர்ந்தளிக்கப்பட்டது. அத்தொகையிலிருந்து ரூ.27.00 கோடி தமிழ்த் திரைப்படங்களின் மீதான கேளிக்கை வரி இழப்பீடாக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கி மேலே ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட அரசாணைகளில் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதேபோல் 2008–2009–ற்கான வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் மானியக் கோரிக்கை எண். 10–ல் ரூபாய் 30.00 கோடி (ரூபாய் முப்பது கோடி மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கம் நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளிடையே 90:10 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். எனவே, தமிழில் பெயர் சூட்டப்படும் தமிழ் திரைப்படங்களுக்கு முழு வரி விலக்களிப்பதனால் 2008–2009–ஆம் ஆண்டில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடு செய்ய ரூ.27.00 கோடி (ரூபாய் இருபத்து ஏழு கோடி மட்டும்) தமிழ் திரைப்படங்களின் மீதான கேளிக்கை வரி இழப்பீடாக மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டது. 2008–2009ஆம் ஆண்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடுசெய்ய ரூ.3.00 கோடி (ரூபாய் மூன்று கோடி மட்டும்) தமிழ் திரைப்படங்களின் மீதான கேளிக்கை வரி இழப்பீடாக மேலே 5–ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டது.

2. முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின் பத்தி 7ல், இது குறித்த ஊரக வளர்ச்சி அமைப்புகளுக்கான ஆணைகள் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் வெளியிடப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 2007–2008–ஆம் ஆண்டில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையிலிருந்து அரசாணைகள் எதுவும் வெளியிடப்படவில்லை. எனவே தமிழில் பெயர் சூட்டப்படும் திரைப்படங்களுக்கு முழு வரிவிலக்களிப்பதனால் 2007–2008–ஆம் ஆண்டில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடுசெய்ய ரூ.3,00,00,000/– (ரூபாய் மூன்று கோடி மட்டும்) தமிழ்த் திரைப்படங்களின் மீதான கேளிக்கை வரி இழப்பீடாக வழங்கி அரசு ஆணையிடுகிறது. மேலும் இத்தொகை மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள வரைமுறைகளின் அடிப்படையில் ஊரக உள்ளாட்சிப் பகுதிகளில் மிக முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பான புதுமையான திட்டங்களுக்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் தலைப்பில் பற்று வைக்கப்படும்.

"3604–00 உள்ளாட்சி மன்றங்களுக்கும், ஊராட்சி நிறுவனங்களுக்கும், இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் 103 – கேளிக்கை வரியை–I திட்டத்தில் சேராதது –AC – கேளிக்கை வரியை தள்ளுபடி செய்வதற்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கு இழப்பீடு – 51 இழப்பீடு – 02 – ஏனைய இழப்பீடு (DPC 3604 -00 – 103 – AC – 5123)

4. மேற்கண்டவாறு பற்றெழுதப்படும் தொகை, கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் வரவு வைக்கப்பட வேண்டும்:–

"8229 00 Development and Welfare Funds – 200 Other Development and Welfare Funds – AY Fund for priority schemes in Rural Areas (DPC 8229 00 200 AY 000 D) (Receipts)"

5. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட கூடுதல் செலவினம் 2009–10ம் ஆண்டு திருத்திய மதிப்பீடு / இறுதித் திருத்திய நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அவ்வாறு பெறப்படும் நிதியை எதிர்நோக்கி இச்செலவினத்தை மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. 2009–10ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்குரிய கருத்துக்களை அனுப்பும் பொழுது, மேற்கண்ட செலவினத்தையும் தவறாமல் சேர்த்து அனுப்புமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு எண். 41973/ஊ.வ./2009, நாள் 30.07.2009–ன் இசைவுடன் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.465 (நானூற்று அறுபத்து ஐந்து) வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**நிரஞ்சன் மார்டி,**
அரசுச் செயலாளர் (பொறுப்பு)